# ஆண்டின் பொதுக்காலம் ஐந்தாம் ஞாயிறு.

# திருவழிப்பாட்டு ஆண்டு A (09-02-2014)

## திருப்பலி முன்னுரை

அன்பு இறைவனின் அழைப்பை ஏற்று, அவருடைய நாளில், அவருடைய மறையுடலாகிய திருச்சபையோடு ஒன்றிணைந்து நிறைபலியில் பங்கேற்க அணியமாயிருக்கும் அன்பின் சொந்தங்கள் அனைவருக்கும் என் பணிவான வாழ்த்துக்களைக் கூறி, மாண்புமிக்க இத்தியாகப் பலியில் பங்கேற்க அன்பு அழைப்பை விடுக்கிறேன். இன்று ஆண்டின் பொதுக்காலம் ஐந்தாம் ஞாயிறு. உலகின் ஒளியாம் நம் ஆண்டவர் இயேசுவின் அன்புப் பிரசன்னத்தின் முன் அவர் அருள் பெற ஒன்று கூடியுள்ளோம்.

வாழ்வை நிறைவாக அளிக்கும் வல்லவராம் இறைவன், தனது ஆசீர்வாதங்களை முழுமையாகப் பெற நாம் செய்ய வேண்டியது என்ன என்பதை இன்றைய வார்த்தைகள் வழியாக மிகவும் தெளிவாகக் கூறுகின்றார். அதாவது: பசித்தோர்க்கு நமது உணவைப் பகிர்ந்து கொடுப்பதும் தங்க இடமில்லா வறியோரை நமது இல்லத்திற்கு அழைத்து வருவதும், உடையற்றோரைக் காணும்போது அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும், சுட்டிக்காட்டிக் குற்றஞ்சாட்டுவதையும், பொல்லாதன பேசுவதையும் நிறுத்திவிட்டு, பசித்திருப்போருக்காக நம்மையே கையளித்து, வறியோரின் தேவையை நிறைவு செய்வதும் நமக்கு ஆசீர்வாதங்களைப் பெற்றுத்தரும் என்பதே இறைவனுடைய அறிவுரை. எனவே! நாம் ஒவ்வொருவரும் நம்மிடையே இருக்கும் தீமையை அகற்றிவிட்டு, சுட்டிக்காட்டிக் குற்றஞ்சாட்டுவதையும் பொல்லாதன பேசுவதையும் நிறுத்திவிட்டு, பசித்திருப்போருக்காக நம்மையே கையளித்து, வறியோரின் தேவையை நிறைவு செய்து: மண்ணுலகிற்கு உப்பாகவும், உலகிற்கு ஒளியாகவும் மாற வரம் கேட்டுத் தொடரும் பலியில் பங்கேற்போம்.

விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**என்றும் வாழும் இறைவா!**

உலகெங்கும் விரிந்து பரவி நிற்கும் உமது திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், இறைமக்களை இறையாட்சி நெறியில் உறுதிபடுத்தி வளரச்செய்ய தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**வல்லமை நிறைந்தவரான தந்தையே!**

உமது பிள்ளைகளாகிய நாங்கள் ஒவ்வொருவரும் எம்மிடையே இருக்கும் தீமையை அகற்றிவிட்டு, சுட்டிக்காட்டிக் குற்றஞ்சாட்டுவதையும் பொல்லாதன பேசுவதையும் நிறுத்திவிட்டு, பசித்திருப்போருக்காக எம்மையே கையளித்து, வறியோரின் தேவையை நிறைவு செய்து: மண்ணுலகிற்கு உப்பாகவும், உலகிற்கு ஒளியாகவும் வாழ்வதற்கு வேண்டிய அருளை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**உழைப்பின் மாண்பை வெளிப்படுத்திய இயேசுவே,**

மனித வாழ்வுக்கு ஓய்வும் அவசியமானதே என்பதனை கண்டு கொள்ளும் ஞானத்தை இந்த அவசர உலகம் அறிந்து கொள்ள அருள்தர உம்மை மன்றாடுகின்றோம்.

**நீதியை நிலைநாட்டும் இறைவா,**

இன்றைய குடும்பங்களில் உண்மையான அன்பு நிலவிடவும், உறவுகளைச் சிதைக்கின்ற சுயநலம், பொருளாசை இவை மறைந்து தியாக மனம் உருவாகிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நல்லாயனே இறைவா!**

இனி நீங்கள் அடிமைகளல்ல: பிள்ளைகள்தாம்: பிள்ளைகளாகவும் உரிமைப்பேறு உடையவர்களாகவும் இருக்கிறீர்கள் என்று கூறினீரே. அதுபோல எம் இளைஞர்களைத் தீய வழிகளில் திசை திருப்பும் அனைத்துத் தீமைகளிலிருந்தும் அவர்களைக் விடுவித்து, அவர்களை ஆன்மீகத்திலும் அருள்வாழ்விலும் உறுதிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பாதுகாப்பின் நாயகனே!**

இன்று கவலை, நோய், துன்பம் போன்றவற்றிலிருந்து விடுதலை பெறத் தவித்துக் கொண்டிருக்கும் அனைத்து மக்கள் மீதும் மனமிரங்கி, அவர்களுக்கு ஆறுதலைக் கொடுத்தும், இயற்கை, செயற்கை அழிவுகளிலிருந்து அவர்களைப் பாதுகாத்திடவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.